# கொரோனா வைரஸ்
## (Corona Virus: COVID - 19)



# கொரோனா வைரஸ்

# (Corona Virus: COVID -19)

- விலங்குகளில் இருந்து மனிதனுக்கு தொற்றை ஏற்படுத்தக்கூடிய ஒரு வைரஸ் இனமாகும். COVID -19 என பெயரிடப்பட்டுள்ளது,

- நோய்த் தொற்றுள்ள மனிதனில் இருந்து இன்னொரு நபருக்கு மூச்சுக்காற்றின் மூலம் அல்லது தொடுகை மூலம் நோய்த் தொற்று ஏற்படும்.

- இவ் வைரஸ் பாரதூரமான குறுகிய கால சுவாசத் தொற்றை ஏற்படுத்தக்கூடியது.

- 2019ம் ஆண்டு டிசெம்பர் மாதம் சீனாவில் வூகான் (Wuhan) இல் முதன்முதலாக கண்டறியப்பட்டது.

**பொதுவான நோய் அறிகுறிகள்:**

- காய்ச்சல்
- இருமல்
- சுவாசத் தொகுதித் தொற்று
- மூச்செடுப்பதில் சிரமம்
- நிமோனியா
- சிறுநீரகச் செயலிழப்பு
- நோய் தீவிரமடைந்த நிலையில் மரணம் சம்பவிக்கலாம்

**நோயரும்பு காலம்:**

நோய்க்கிருமித்தொற்றுக்கு உட்படுத்தப்பட்டு 2 - 14 நாட்கள் நோயரும்பு காலமாகும்.

**நோயிலிருந்து பாதுகாக்கும் அல்லது தடுக்கும் வழிமுறைகள்**

- அடிக்கடி கைகளைச் சவர்க்காரமிட்டு நன்கு கழுவுதல்

- மூக்கு மற்றும் வாய் பகுதியினை மூடி முகவுறை (Mask) அணிதல்

- இருமம் போதும் தும்மும் போதும் கைக்குட்டை அல்லது ரிசு பயன்படுத்துதல்

- மிருகங்களுடன் நேரடித் தொடர்பைத் தவிர்த்தல்

- நோய் தொற்று அல்லது அறிகுறி உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பைத் தவிர்த்தல்

- அதிக சன நடமாட்டம் உள்ள இடங்களுக்கு செல்வதைத் தவிர்தல்

- விலங்கு உணவுகளைத் தவிர்த்தல் அல்லது நன்கு வேகவைத்து உண்ணல்

- நோய் அறிகுறிகள் தென்படின் விரைவான வைத்திய ஆலோசனை பெறல்

தயாரிப்பு உதவி:

திருமதி.வி.சுரேஸ்குமார்

தொழில்நுட்ப உத்தியோகத்தர்

சமுதாய - குடும்ப மருத்துவத்துறை

தயாரிப்பு ஆலோசனை:

டாக்டர். பே. அ. டினேஸ் கூஞ்ஞ

தலைவர், சமுதாய - குடும்ப மருத்துவத்துறை

வெளியீடு:

சுகாதாரக் கல்விசார் பொருட்கள் தயாரிப்பலகு

சமுதாய - குடும்ப மருத்துவத்துறை, மருத்துவபீடம்

யாழ் பல்கலைக்கழகம்

பெப்ரவரி 2020